1989 ஏப்ரல் 24]

ஆதி திராவிடர் கூட்டுக் கிராமத் திட்டத்தின் கீழ் தொழிற்சாலைகள்.

117—(*வினா எண். 1257)— திரு. எஸ். டி. உக்கம் சந்த் மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.—

மதுராந்தகம் தொகுதியில் ஆதி திராவிட கூட்டுக் கிராமத் (Cluster) திட்டத்தின் கீழ் தொழிற்சாலைகள் அமைக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : — தலைவர் அவர்களே, கூட்டமைப்புத் திட்டத்தின் கீழ் (Cluster Development Programme) மதுராந்தகம் தொகுதி 1988-89 வரை தெரிவு செய்யப்படவில்லை. 1989-90 ஆம் ஆண்டுக்கு கூட்டமைப்புத் திட்டத்தின்கீழ் ஒன்றியங்கள் தெரிவு செய்யப் படும்போது மதுராந்தகம் ஒன்றியம்தெரிவு செய்யப்படுமானால் அங்கு தொழிற்சாலைகள் அமைப்பது குறித்து அரசு பரிசீலனை செய்யும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கிளஸ்டர் திட்டத்திற்கு மத்திய அரசினுடைய உதவி கிடைக்கின்றது. இப்போது 65 யூனியன் களில் இந்த கிளஸ்டர் திட்டம் செயற்படுத்தப்பட்டு, அதன் மூலமாக ஒவ்வொரு திட்டத்திலும் கிட்டத்தட்ட 100 ஹரிஜனப் பெண்கள் வேலை செய்யக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. இந்த ஒரு பகுதிக்கு மட்டுமல்ல, எங்கெங்கே ஹரிஜனப் பெண்கள் அதிகமாக இருக்கின்றார்களோ, அங்கே இந்த கிளஸ்டர் திட்டத் தைச் செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள ஆதி திராவிடர்களின் பொரு ளாதார மேம்பாட்டை துரிதப்படுத்துவதன் காரணமாக அரசு 1980-81 ஆம் ஆண்டிலிருந்து சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின் கீழ் செயல்படுகிறது. சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின்கீழ் ஒரு பகுதியாக சிறப்பு மத்திய நிதி உதவியுடன் கூட்டமைப்புத் திட்டம் 1982—83 முதல் செயல்பட்டு வருகின்றது. இத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களி லிருந்தும் ஒவ்வொரு ஒன்றியம், பொருளாதார நிலையில் மிகவும் பின்தங்கிய பகுதி, குறிப்பாக எந்தத் தொகுதி என்பது தெரிவு செய்யப்படுகிறது. இங்ஙனம் தெரிவு செய்யப்பட்ட பகுதி ஒவ்வொன்றும், ஆதி திராவிட குடும்பங்கள் நிறைந்த கிராம மக்கள் தொகையின் அடிப்படையில் தெரிந்தெடுக்கப்படு கிறது. அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட, ஒன்றியங்களில் மொத்தம் ஆயிரம் ஆதி திராவிட குடும்பங்கள் பயன்பெறும் வகை யில், தகுதி வாய்ந்த பல திட்டங்கள் குறித்து, செயற்குறிப்புகள்

பல்வேறு துறைத் தலைவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் களிடமிருந்து பெறப்பட்டு, அரசு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன்.

சென்னை பூங்கா நகர் தொகுதிக்குக் குடிநீர்.

*118—(*வினா எண். 491)—* **திரு. அ. இரகுமான்கான் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) சென்னை பூங்கா நகர்த் தொகுதியில் பார்வதி கக்கன் காலனி பொதுமக்களுக்குக் குடிநீர் குழாய்த் துண்டிப்பால் நீண்ட காலமாக குடிதண்ணீர்ப் பிரச்சினை ஏற்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே,(அ) சென்னை பூங்கா நகர் தொகுதியில் பார்வதி கக்கன் காலனி பகுதிக்கு கொடுக்கப்பட்டுள்ள குடிநீர் குழாய் இணைப்பு எந்தக் காலத்திலும் துண்டிக்கப்படவில்லை. குடிநீர் விநியோகம் நிறுத்தப்படவில்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

திரு. அ. இரகுமான்கான் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பூங்கா நகர் தொகுதி புளியந்தோப்புப் பகுதி, பார்வதி காலனி, கக்கன் காலனி பகுதிகளில், அந்தப் பகுதியின் சட்ட மன்ற உறுப்பினர் என்ற முறையில் நானே நேரில் சென்று பார்த் தேன். குடிநீர்க் குழாய்கள் துண்டிக்கப்பட்டு, மக்கள் தண்ணீர் பிரச்சினையால் மிகவும் அவதிப்படுகிறார்கள். ஆனால் அரசுக்குத் தவறான தகவல் தரப்பட்டிருப்பதால், எது சரி யென்று தெரியவில்லை. ஆகவே கேள்வி எழவில்லை என்று சொல்கின்ற நிலை மாறி மாண்புமிகு அமைச்சர் அவர்களே நேரடியாக வந்து பார்த்து, அதைப் பரிசீலித்து ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன். அது சீர் செய்யப் படுகின்ற வரைக்கும் 'ஆல்டர்னேடிவ் அரேஞ்மெண்ட்ஸ்' ஆக லாரிகளின் மூலமாகவும், டாங்குகளின் மூலமாகவும் தண்ணீர் வழங்குகின்ற ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, தற்போது இந்த பம்புகளில் ஏற்பட்டுள்ள சில பழுதுகளால் குடிசை மாற்று வாரியம் இரண்டு கைப்